# கிறிஸ்து மறுபடி வரும்பொழுது அவர் என்ன செய்ய மாட்டார்

*கிறிஸ்துவின் இரண்டாம் வருகைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து, தூதர்கள் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் சாட்சியங்களை நாம் காண்கின்றோம் (யோவா. 14:3; அப். 1:11; எபி. 9:28). இரண்டாம் வருகையைப் பற்றி ஏராளமான யூகங்கள் இருந்திருக்கின்றன. இது இந்தக் கேள்வியை எதிர்மறையாகக் கற்கும்படி நம்மை வழி நடத்துகின்றது: இயேசு வரும்பொழுது அவர் செய்யாமல் இருக்கக் கூடிய சில விஷயங்களை நாம் கவனிப்போம்.*

## அவர் பூமிக்குரிய ஒரு இராஜ்யத்தை நிலைநாட்ட மாட்டார்

அரியணையில் அமருவதற்காகவே இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டார் (அப். 2:30, 31), மற்றும் அவர் இப்பொழுது ஆளுகை செய்கின்றார் (எபி. 1:3; எபே. 1:20). அவர் தமது அரச உரிமைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டுள்ளார்.

இராஜ்யம் "சமீபமாயிற்று" (மாற். 1:15) என்று யோவான் ஸ்நானன் பிரசங்கித்தார். இயேசு, "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது" என்று பிரசங்கிக்கும்படி எழுபது பேரிடம் கூறினார் (லூக். 10:9). இராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கும்படி அவர் தம் சீஷர்களுக்குப் போதித்தார் (மத். 6:10), மற்றும் அவர்களில் சிலர் இராஜ்யம் பெலத்தோடே வருவதைக் காண்பதற்கு உயிருடன் இருப்பார்கள் என்றும் அவர்களிடத்தில் அவர் கூறினார் (மாற். 9:1). இந்த வசனப் பகுதிகள் சத்தியத்தை உரைத்தன என்றால், இராஜ்யம் வந்திருக்கின்றது என்றே அர்த்தமாகும்.

இராஜ்யம் இருப்பதாகப் புதிய ஏற்பாட்டின் பிற்பகுதியில் பேசப்படுகின்றது (கொலோ. 1:13; எபி. 12:28). 1 கொரி. 15ல் இரண்டாம்

வருகையைப் பற்றிப் பேசிய பிறகு பவுல், "அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் ... தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்" (வ. 24) என்று கூறினார். அதே அதிகாரத்தில் பவுல், "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்" (வ. 25, 26) என்றும் அறிவித்தார்.

எனவே கிறிஸ்து ஒரு இராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக வரப்போவதில்லை என்று நாம் காண்கின்றோம். அப். 2ல் பதிவு செய்யப்பட்டுள்ள பெந்தெகொஸ்தே நாளில் இருந்து அவருடைய இராஜ்யமானது இங்கு இருந்து வருகின்றது. அது ஆவிக்குரிய இயல்புடையதாக இருக்கின்றது, உன்னதங்களில் உள்ள பரலோக அரியணையில் இருந்து கிறிஸ்து இந்த இராஜ்யத்தின் மீது ஆளுகை செய்கின்றார்.

## அவர் யூதர்களை உயர்த்த மாட்டார்

பலர் நம்பிக் கொண்டிருப்பதற்கு முரண்பாடாக, யூதர்கள் மீது விசேஷித்த தயவைப் பொழிவதற்காக இயேசு வரப் போவதில்லை. நீங்கள், "இஸ்ரவேல் இனமானது பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளும் என்பதை முன்னுரைக்கும் சில வசனப் பகுதிகள் வேதாகமத்தில் இல்லையா?" என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு "ஆம்" என்பதே பதிலாகும் - ஆனால் இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை சுதந்தரித்துக் கொண்ட பொழுதே அந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டன. தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்த நாட்டை அவர்களுக்குக் கொடுத்து விட்டார். இந்த உண்மையானது நெகேமியா 9:8 மற்றும் யோசுவா 21:43-45 ஆகியவற்றில் வலியுறுத்தி அறிவிக்கப்படுகின்றது. "எல்லாம் நிறைவேறிற்று" (யோசு. 21:45). இந்த அறிவிப்புகளுக்கு மீண்டும் திரும்பி, நாடுபற்றிய வாக்குத்தத்தங்களை மேற்கோள் காட்டி, அவைகள் இனி நிறைவேற வேண்டியதாய் இருக்கின்றன என்று உறுதிப்படுத்துவது என்பது வேதவசனங்களை மிகவும் மோசமான தவறானதாய் பயன்படுத்துவதாக இருக்கின்றது.

மீண்டும் நீங்கள், "ஆனால் இஸ்ரவேலர் தங்கள் நாட்டில் மறு சீரமைக்கப்படுவார்கள் என்பதற்காக தீர்க்கதரிசனங்கள் இல்லையா?" என்று கேட்கலாம். "ஆம்" இந்த இயல்புடைய தீர்க்கதரிசனம் ஒவ்வொன்றும் பாபிலோனிய அடிமைத்தனத்தி ற்கு முன்னதாகவோ, நாடு கடத்தப்பட்டிருந்த பொழுதோ அல்லது இஸ்ரவேலர்கள் அவர்களின் சொந்த நாட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுதோ உரைக்கப் பட்டதாகும். இஸ்ரவேலரை விடுதலையாக்கும்படி கோரேஸ் தனது உத்தரவை வெளியிட்ட பொழுது மற்றும் செருபாபேல், எஸ்றா மற்றும் நெகேமியா ஆகியோரின் வழி நடத்துதலின் கீழ் அவர்கள் திரும்பி வந்த பொழுது மறு சீரமைப்பு வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்பட்டன (2 நாளா. 36:23). இவ்விதமாக மறுசீரமைப்பின் வாக்குத்தத்தங்கள்

*அவர்களுக்கு எதிர்காலத்தில் பயன்படுவதாக உள்ளது என்று மேற்கோள் காட்டுவது வேதவசனங்களை மிக மோசமாகக் கையாளுவதாய் உள்ளது.*

*பிரதான கட்டளையானது சகல நாட்டாரையும் அரவணைக்கின்றது (மத். 28:19). யூதர்கள் இரட்சிக்கப்படுகிறார்களென்றால், அது தேவனு டைய இரட்சிப்பின் திட்டத்தில் உள்ள நிபந்தனைகளின்படியே ஆகும். இன்றைய நாட்களில் தேவன் மக்களிடையே பாகுபாட்டை ஏற்படுத்து வதில்லை (அப். 10:34, 35; எபே. 2:14-16); மாம்சமானது இரட்சிப்பின் விஷயத்தில் ஒன்றுக்கும் உதவாது (கலா. 3:26-29; ரோமர் 2:28, 29; கலா. 5:6; பிலி. 3:3). கிறிஸ்தவர்கள் தேவனுடைய இஸ்ரவேலராய் இருக்கின்றனர்.*

## *இரட்சிக்கப்படுவதற்கு இன்னொரு வாய்ப்பை அவர் தர மாட்டார்*

*புத்தி கூறுவதற்கோ, எச்சரிப்பதற்கோ மற்றும் இரட்சிப்பதற்கோ கிறிஸ்து மறுபடியும் வரமாட்டார். அவர் எச்சரிப்பதற்கும், இரட்சிப்பதற்கும் ஏற்கனவே வந்து விட்டார். "இந்தக் கடைசி நாட்களில்" தேவன் தமது குமாரன் மூலமாகவே நமக்குத் திருவுளம் பற்றியிருக்கின்றார் (எபி. 1:2). "கடைசி நாட்கள்" என்பது கிறிஸ்துவின் யுகத்தைக் குறிப்பிடும் விளக்கச் சொல் ஆகும். பெந்தெகொஸ்தே நாள் அன்று பேதுரு தமது பிரசங்கத்தை உரைத்த பொழுது, தமது உரையைக் கேட்டவர்கள் "கடைசி நாட்களில்" வாழ்ந்து கொண்டிருந்ததாக அவர் போதித்தார் (அப். 2:16, 17). புதிய ஏற்பாட்டில் "கடைசி நாட்கள்" என்ற விளக்கச் சொல்லானது உலகத்தின் முடிவைப் பற்றி எதுவும் கூறுவதில்லை; அது, இக்கால கட்டமே கடைசி யுகம் என்று மட்டுமே குறிப்பிடுகின்றது. ஆகையால், எச்சரிக்கை செய்வதற்காக இயேசு வர மாட்டார், ஆனால் எல்லா இனத்தாரையும் தமக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்குக் கொண்டு வரும் பொழுது அவர் "கடைசி நாட்களின்" யுகமாகிய இந்த யுகத்தை அழித்து முழுமையாக்க மறுபடியும் வருவார்.*

## *முடிவுரை*

*கிறிஸ்து திரும்பி வரும் பொழுது, இரட்சிப்பிற்கான வாய்ப்பின் காலம் முடிந்திருக்கும், ஆயத்தமாயிராதவர்களுக்கு அவர் இரட்சிப்பிற்கான இன்னொரு வழியை அளிக்க மாட்டார்.*

*அவரது மறுவருகைக்கு நீங்கள் ஆயத்தமாய் இருக்கின்றீர்களா? மிகவும் தாமதமாகு முன்பு அவர் அளிக்கும் இரட்சிப்பைப் பற்றிக் கொள்ளுங்கள்!*